# பகுதி III

# பகுதி III

## 1996 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் — பக்கம்


1. சருவதேச அபிவிருத்தி அமைப்பு கொடுகடன் 2380சீஏ
இரண்டாவது விவசாய விரிவாக்கல் செயற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 02 / 96 — I

2. இறக்குமதிகளுக்கான நடவடிக்கை முறை – ஆசிய அபிவிருத்தி
வங்கிக் கடன் இலக்கம் 1204சிறி (எஸ்எப்) நகர
அபிவிருத்தித்துறை செயற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 03 / 96 — III

3. சருவதேச அபிவிருத்தி அமைப்பு கடன் 1698 சீஈ
இரண்டாவது தொழிற்பயிற்சி செயற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 04 / 96 — VII

4. யப்பான் / இலங்கை சிறப்புக் கொடை யென் 71,148,000/-
(22 வது படுகடன் நிவாரணக் கொடை)
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 05 / 96 — X

5. சருவதேச அபிவிருத்தி அமைப்பு 2249 சீஏ – இரண்டாவது
தொலைத்தொடர்பு செயற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 06 / 96 — XII

6. இந்தியா இலங்கை கொடுகடன் ஒப்பந்தம் ஐ. அ. டொலர் 15 மில்லியன் –
இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கை முறை
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 07 / 96 — XV

7. இறக்குமதிகளுக்கான நடவடிக்கை முறை – ஆசிய அபிவிருத்தி
வங்கி கடன்இலக்கம் 1414 சிறி (எஸ்எப்) இரண்டாவது
வலு அமைப்பு முறை நீடிப்பு செயற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீஃட / 08 / 96 — XIX


சுற்றறிக்கை


8. வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தாள்களின்
கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் – 1996 — XXIII

பிடீ/எப் /எப்/ஐடீஏ/564

வங்கித் தொழில் திணைக்களம்
வெளிநாட்டு நிதிப் பிரிவு
1996 சனவரி 23.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடீ / 02 / 96

முகாமையாளர்
மெட்ரோ பொலிடன் இறக்குமதிகள் திணைக்களம்
இலங்கை வங்கி
யோக் வீதி
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா,

**சருவதேச அபிவிருத்தி அமைப்பு கொடுகடன் 2380 சீஏ**
**இரண்டாவது விவசாய விரிவாக்கல் செயற்றிட்டம்**

உலக வங்கியின் சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தலைப்பிடப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கை முறை பின்பற்றப்படலாம்.

1. செயற்றிட்ட முகாமையாளர், இரண்டாவது விவசாய விரிவாக்கல் செயற்றிட்டம், விவசாய காணி காட்டுத் தொழில் அமைச்சு 42, சர் மாக்கஸ் பர்ணாந்து மாவத்தை கொழும்பு 7 என்பவரின் சார்பில் உங்களது வங்கியினால் நிறுவப்பட்ட துணைநாடா கைமீட்புச் செய்ய இயலாத உறுதிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராக இறக்குமதிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. நாணயக் கடிதங்களை தொடங்குவதற்கான உங்களது அதிகாரமானது "அய்டீஏ 2380 சீஈ – இரண்டாவது விவசாய விரிவாக்கல் செயற்றிட்டம்" என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதமாகும்.

3. என்னால் வேறு வகையில் அறிவுறுத்தப்பட்டால் அன்றி உங்களது வங்கியினால் தொடக்கி வைக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான செலவீடு சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் மேற்கொள்ளப்படும் என்பதனையும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் சார்பாக சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் சிறப்புக் கடப்பாடு வழங்கப்படுமிடத்து மட்டுமே நாணயக்கடிதம் செயற்படும் என்பதனையும் குறிப்பிடல் வேண்டும்.

4. உங்களது வாடிக்கையாளரினால்படிவம் 1931இல் (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) சருவதேச அபிவிருத்தி அமைப்பின் சிறப்புக் கடப்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) செலுத்தப்படவுள்ள கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதியொன்று.

(ஆ) உங்களது வங்கியினால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள்.

5. சருவதேச அபிவிருத்தி அமைப்பிற்கான ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கி அறிவுறுத்தப்பட வேண்டியதோடு அவை பின்வருவன தொடர்பான திருத்தங்களுக்கான எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கக் கூடியதாக இருக்கும்.

(அ) நாணயக் கடிதத்தின் பெறுமதி.

(ஆ) மூலத் தேதிக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு மேலாக அல்லது சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட 'சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு அப்பால் நாணயக் கடிதத்தின் காலாவதித் திகதியின் ஏதேனும் நீடிப்பு.

ஏனைய திருத்தங்களுக்கு சருவதேச அபிவிருத்தி அமைப்பின் முன் ஒப்புதல் தேவைப்பட மாட்டாது.

6. தலைப்பிடப்பட்ட கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையினால் வழங்கப்படவுள்ளமையினால் ஏனைய நாணயமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயக் கடிதங்கள் தொடர்பாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான அதனது சிறப்புக் கடப்பாட்டுக் கடிதத்தில் சருவதேச அபிவிருத்தி அமைப்பு சிறப்பு எடுப்பனவு உரிமைக் கடப்பாட்டினைக் குறித்துரைக்கும். அதனது கடப்பாட்டின் இந்த மட்டுப்படுத்தலின் காரணமாக நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு சருவதேச அபிவிருத்தி அமைப்பு வெளிநாட்டில் உள்ள உங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் மொத்தத் தொகையினை செலவீடு செய்யாவிடில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பாக உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய மிகுதியை நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

7. இக்கடனின் கீழ் இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்தின் இணைக்கிணை நிதியக் கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ள கப்பலேற்று ஆவணங்களின் ரூபாய் பெறுமதியைச் செலுத்த வேண்டியதில்லை. எனவே அத்தகைய ஆவணங்கள் பெறப்பட்ட உடனேயே உங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய தரகுகள், கட்டணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை அறவிட்ட பின்னர் அத்தகைய ஆவணங்களை உங்களது வாடிக்கையாளருக்கு நீங்கள் விடுவிக்கலாம்.

8. ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றுடன் நாணயக் கடிதத்தின் பிரதிகள் கொழும்பு, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9. இது தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகள் உங்களுக்கு தனியாக அறிவுறுத்தப்படும்.

உங்களின் உண்மையுள்ள

ஏ. சண்முகசாமி
மேலதிக முதன்மைக் கணக்காளர்
முதன்மைக் கணக்காளருக்காக.

பிரதிகள் : 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.
2. திரு. ஜீ. ஏ. குணதிலக
செயற்றிட்ட முகாமையாளர்,
இரண்டாவது விவசாய விரிவாக்க செயற்றிட்டம்
விவசாய, காணி, காட்டுத் தொழில் அமைச்சு
42, சர் மாக்கஸ் பர்ணாந்து மாவத்தை
கொழும்பு 7.

வங்கித் தொழில் திணைக்களம்
1996 பெப்புருவரி 23

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீ டி / 03 / 96

முகாமையாளர் (கூட்டுக்கிளை)
இறக்குமதித் திணைக்களம்
இலங்கை வங்கி
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா

**இறக்குமதிகளுக்கான நடவடிக்கை முறை**
**ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 1204 சிறி (எஸ்எப்)**
**நகர அபிவிருத்தித் துறை செயற்றிட்டம்**

நகர அபிவிருத்தித் துறை செயற்றிட்டத்திற்காக சிஎஉ 19,204,000.00 இற்குச் சமமான தொகையொன்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (இதன் பின்னர் ஆஅவ எனக் குறிப்பிடப்படும்) இணங்கியுள்ளது. இச் செயற்றிட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் (இதன் பின்னர் நஅஅ எனக் குறிப்பிடப்படும்) செயற்படுத்தப்படும். செயற்றிட்டத்திற்கான உபகரணங்களின் இறக்குமதிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபை இக் கடனின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும். இச் செயற்றிட்டத்தின் கீழான இறக்குமதிகைளக் கையாளும் போது பின்வரும் நடவடிக்கை முறையினைப் பின்பற்றுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விண்ணப்பம் மேற்கொள்ளப்படுமிடத்து தகைமையுடைய மூல நாடுகளிலிருந்தான அனைத்து இறக்குமதிகளும் உங்களால் நிறுவப்பட்ட துணை நாடாத கைமீட்புச் செய்ய இயலாத உறுதி செய்யப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நாணயக் கடிதமும் பின்வரும் உறுப்புரையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> " இந்த நாணயக் கடிதமானது ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 1204 சிறி (எஸ்எப்) இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் அறிவுறுத்தும் / உறுதி செய்யும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும் போது மட்டுமே நாணயக் கடிதம் பயனுறுவதாக அமையும். கொடுப்பனவுக்காக மேற்குறிப்பிட்ட கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்."

மேலே குறிப்பிடப்பட்ட உறுப்புரை நாணயக் கடிதத்தில் ஒருங்கிணைக்கப்படாவிட்டாலும் கூட நிதி மற்றும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான உங்களது கடப்பாட்டின் வலுவில் அது உடனடியாகச் செயல்படக் கூடியதாக இருக்கும். எனினும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாடு வழங்கப்படும் போது நிதியியல் கடப்பாட்டினை ஆசிய அபிவிருத்தி வங்கி நகர்த்திவிடும். இந்த விடயத்தில் நாணயக் கடிதம் பின்வரும் உறுப்புரையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

" இந்த நாணயக் கடிதத்திற்கான நிதியிடல் இலங்கை, கொழும்பு 1, இலங்கை வங்கியினால் மேற்கொள்ளப்படும். எனினும் இது ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1204 சிறி (எஸ்எப்) இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு அறிவுறுத்தும் / உறுதிப்படுத்தும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்போது பின்னையவர் மேலே குறிப்பிடப்பட்ட கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கொடுப்பனவினை / செலவீட்டைக் கோர வேண்டும்."

உங்களது நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஒழுங்குபடுத்தும். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வேண்டுகோளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கினால் இந்தக் கடிதத்தின் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளவாறான படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வர்த்தக வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்.

3. (i) நாணயக் கடிதத்தில் பின்வருவனவற்றை உட்படுத்தும் திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் எழுத்து மூலமான ஒப்புதல் தேவைப்படும்.

(அ) நாணயம் மற்றும் நாணயக் கடிதத்தின் தொகை என்பனவற்றை உள்ளடக்கிய கொடுப்பனவு நியதிகள்.

(ஆ) விளக்கக் குறிப்பு அல்லது பொருட்களின் தொகை.

(இ) நன்மை பெறுநர்.

(ஈ) மூல நாடு மற்றும்.

(உ) இறுதி நாளுக்கு அப்பால் அதாவது கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான இறுதி நாளாகிய 1998 யூன் 30ஆம் நாளுக்கு அப்பால் நாணயக் கடிதத்தின் காலாவதித் திகதியின் நீடிப்பு.

மேலே (அ) விலிருந்து (உ) வரையிலானவற்றில் உள்ளடக்கப்படாத திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் தேவைப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களின் ஒப்புதலுக்கான கோரிக்கைகள், இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உங்களினால் கைச்சாத்திடப்பட்ட திருத்தத்தின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் நாணயக் கடிதத்திற்கான திருத்தமானது பின்வரும் ஏற்பாட்டினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

" இந்தத் திருத்தமானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதல் வழங்கப்படும்போது பயனுறுவதாக அமையும்".

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கப்பட்டால் இக்கடிதத்தின் இணைப்பு 3 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் உங்களது பேராளருக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் தெரியப்படுத்தப்படும்.

(ii) ஆசிய அபிவீருத்தி வங்கியின் முன் ஒப்புதல் இன்றி கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான கடைசித் திகதி வரை காலாவதியாகும் தினமும் கப்பலேற்றும் தினமும் நீடிக்கப்படலாம். அத்தகைய நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து உங்களினால் பொருத்தமான முறையில் கைச்சாத்திடப்பட்ட நீடிப்பின் பிரதியொன்று இணைக்கப்பட்டதும் இக்கடிதத்தின் இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளதுமான படிவத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டாலும் உட்படுத்தப்படாவிட்டாலும் ஒவ்வொரு திருத்தத்தினதும் இரண்டு பிரதிகள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு தேவையானவிடத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கல்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபை ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் நியதிகளின்படி நன்மை பெறுநருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது உங்களது பேராளர், சம்பந்தப்பட்ட ஆவணங்களை உங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியதோடு இக்கடிதத்தின் இணைப்பு 4 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செலவீட்டைக் கோர வேண்டும். செலவீட்டுக்கான கோரிக்கையின் பிரதியொன்றினையும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உங்களது பேராளர் அனுப்பி வைத்தல் வேண்டும். உடனடியான பகிர்ந்தளிப்புக்கு வசதி செய்து கொடுப்பதற்காக இந்தக் கடிதத்தின் இணைப்பு 5இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உங்களது பேராளர் உறுதிப்படுத்தப்பட்ட சுவிப்ட், ரெலெக்ஸ் அல்லது கேபிள் கோரிக்கையொன்றினை அனுப்பி வைக்கலாம். உங்களது பேராளருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி செலவீட்டை மேற்கொண்டுள்ளதா என்பதை அதி கூடிய விரைவில் உங்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு செலவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நீங்கள் திருப்திப்படும் வரை உங்களது பேராளரிடமிருந்து பெற்றுக் கொண்ட கப்பலேற்றல் ஆவணங்களை நீங்கள் வைத்திருத்தல் வேண்டும். ஆவணங்களை விடுவிக்கும் நேரத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து எத்தகைய இணைக்கிணை நிதியமும் சேகரிக்கப்படலாகாது.

5. கப்பலேற்றும் ஆவணங்களுக்கும் நாணயக் கடிதங்களின் நியதிகளுக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் கொடுப்பனவுக்கான கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுவதற்கோ அல்லது (கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்) வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுக் கடிதத்தினை ஏற்றுக்கொள்ளுவதற்கோ ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இயலாது காணப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வர்த்தக வங்கி அத்தகைய வேறுபாடுகளின் மத்தியிலும் கொடுப்பனவினை மேற்கொள்ளுவதற்காக உங்களின் மூலமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்தினை கோர வேண்டும்.

உங்களுடன் கலந்தாலோசித்து நகர அபிவிருத்தி அதிகாரசபை கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தினை வழங்கிய பின்னர் அத்தகைய வேறுபாடு சம்பந்தமாகவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கேபிள் மூலம் அறிவித்தல் வேண்டும்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயமொன்றினால் கடப்பாடு வழங்கப்பட்டிருக்கும் வேளையில் அத்தகைய கடப்பாட்டின் கீழ் கொடுப்பனவுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயம் கிடைக்கத்தக்கதாக இருக்குமென ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்பார்க்கும் செலாவணி வீதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான தொகையினை கடப்பாட்டுக் கடிதம் குறித்துரைக்கும். உங்களது பேராளர் களில் எவரேனும் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயத்தில் கோரிய ஏதேனும் குறிப்பிட்ட

உரிமை கோரல் விடயத்தில் ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாட்டின் கீழ் கிடைக்கத்தக்கதாக உள்ள தொகையினை விஞ்சுமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியானது கிடைக்கத்தக்கதாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலரின் அளவுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லா நாணயங்களின் செலவீட்டை மட்டுப்படுத்தும். இதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் உங்களது நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட உரிமை கோரல் சம்பந்தமாக உங்களது பேராளருக்கான முழுமையான செலவீட்டை அல்லது பகுதியொன்றினைச் செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மறுப்புத் தெரிவிக்குமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அனுமதிக்கப்படாத தொகையினை உங்களது பேராளருக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம். இந்த நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் நீங்கள் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.

7. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் உங்களுக்கு அறிவிப்பார்.

8. உங்களது அனைத்துக் கட்டணங்களும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கிற்காக இருத்தல் வேண்டும்.

உங்களின் உண்மையுள்ள

எம். பி. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

பிரதிகள் : 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
2. பணிப்பாளர்
நகர அபிவிருத்தித் துறை செயற்றிட்டம்
நகர அபிவிருத்தி அதிகார சபை
27, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

பிடீ/எப்எப்/ஐடீஏ/1698 – சீஈ

வங்கித் தொழில் திணைக்களம்
வெளிநாட்டு நிதிப் பிரிவு
1996 ஏப்பிரல் 18.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடீ / 04 / 96

முகாமையாளர்
மெட்ரோ பொலிடன் இறக்குமதிகள் திணைக்களம்
இலங்கை வங்கி
யோக் வீதி
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா,

**சருவதேச அபிவிருத்தி அமைப்பு கடன் 1698 சீஈ**
**இரண்டாவது தொழிற்பயிற்சி செயற்றிட்டம்**

உலக வங்கியின் சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தலைப்பிடப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கை முறை பின்பற்றப்பட வேண்டும்.

1. கொழும்பு 7, இலக்கம் 123 விஜேராம மாவத்தையில் "சவ்சிரிபாயவில்" அமைந்துள்ள வீடமைப்பு, நிருமாண, பொதுப் பயன்பாட்டுப் பொருட்கள் அமைச்சின் நிருமாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவரின் சார்பாக உங்களது வங்கியில் நிறுவப்பட்ட துணை நாடாத, கைமீட்புச் செய்ய இயலாத உறுதி செய்யப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராகவே இறக்குமதிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. நாணயக் கடிதங்களை ஆரம்பிப்பதற்கான உங்களது அதிகாரமானது "ஐடீஏ 1698 – சீஈ – இரண்டாவது தொழிற் பயிற்சிச் செயற்றிட்டம்" என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதமாகும்.

3. என்னால் வேறு வகையில் அறிவுறுத்தப்பட்டாலன்றி உங்களது வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான செலவீடு சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் மேற்கொள்ளப்படும் என்பதனையும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் சார்பாக சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் சிறப்புக் கடப்பாடு வழங்கப்படுமிடத்து மட்டுமே நாணயக் கடிதம் செயற்படும் என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

4. சருவதேச அபிவிருத்தி அமைப்பின் சிறப்புக் கடப்பாட்டுக்கான விண்ணப்பங்கள் உங்களது வாடிக்கையாளரினால் படிவம் 1931 இல் (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) மேற்கொள்ளப்பட வேண்டியதோடு அதனோடு பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) செலுத்தப்படவுள்ள கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதியொன்று.

(ஆ) உங்களது வங்கியினால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள்.

5. சருவதேச அபிவிருத்தி அமைப்புக்கான ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கி அறிவுறுத்தப்பட வேண்டியதோடு அவை பின்வருவன தொடர்பான திருத்தங்களுக்கு எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கக் கூடியதாக இருக்கும்.

(அ) நாணயக் கடிதத்தின் பெறுமதி

(ஆ) விளக்கவுரை அல்லது பொருட்களின் தொகை

(இ) நன்மை பெறுநர்

(ஈ) மூலத் தேதிக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு மேலாக அல்லது சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப்பட்ட தேதிக்கு அப்பால் நாணயக் கடிதம் காலாவதியாகும் தேதியில் ஏதேனும் நீடிப்பு.

ஏனைய திருத்தங்களுக்கு சருவதேச அபிவிருத்தி அமைப்பின் முன் ஒப்புதல் தேவைப்பட மாட்டாது.

6. தலைப்பிடப்பட்ட கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையினால் வழங்கப்படவுள்ளமையினால் ஏனைய நாணயமொன்றினால் குறிப்பிடப்பட்டுள்ள நாணயக் கடிதங்கள் தொடர்பாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான அதனது சிறப்புக் கடப்பாட்டுக் கடிதத்தில் சருவதேச அபிவிருத்தி அமைப்பு சிறப்பு எடுப்பனவு உரிமைக் கடப்பாட்டினைக் குறித்துரைக்கும். அதனது கடப்பாட்டின் இந்த மட்டுப்படுத்தலின் காரணமாக நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு சருவதேச அபிவிருத்தி அமைப்பு வெளிநாட்டில் உள்ள உங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் மொத்தத் தொகையின் செலவீட்டை மேற்கொள்ளாவிட்டால் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பாக உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய மிகுதியை நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

7. இக்கடனின் கீழ் இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்தின் இணைக்கிணை நிதியக் கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ள கப்பலேற்று ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினைச் செலுத்த வேண்டியதில்லை. எனவே அத்தகைய ஆவணங்கள் பெறப்பட்ட உடனேயே உங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய தரகுகள், கட்டணங்கள், ஏதேனும் இருப்பின் அவற்றை அறவிட்ட பின்னர் அத்தகைய ஆவணங்களை உங்களது வாடிக்கையாளருக்கு நீங்கள் விடுவிக்கலாம்.

8. ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றுடன் நாணயக் கடிதங்களின் பிரதிகள் கொழும்பு இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9. இது தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகள் தனியாக உங்களுக்கு அறிவுறுத்தப்படும்.

உங்களின் உண்மையுள்ள

ஏ. சண்முகசாமி
மேலதிக முதன்மைக் கணக்காளர்
முதன்மைக் கணக்காளருக்காக.

பிரதிகள் : 1. தலைவர்
நிருமாண பயிற்சி அபிவிருத்திக்கான நிறுவனம்
"சவ்சிரிபாய"
123, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.

2. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீட / 05 / 96

வெளிநாட்டு நிதிப் பிரிவு
வங்கித் தொழில் திணைக்களம்
தொலைபேசி : 872604
1996 மே 21.

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்,

**யப்பான் இலங்கை சிறப்புக் கொடை யென் 71,148,000/-**
**(22 ஆவது படுகடன் நிவாரணக் கொடை)**

1995 திசெம்பர் 27ஆம் நாளன்று கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளிலிருந்தான இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்காக யப்பானிய அரசாங்கம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கு கொடையொன்றினைக் கிடைக்கச் செய்துள்ளது. இக்கொடையின் கீழ் இறக்குமதிகளுக்கான ஒதுக்கீடுகள் வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும். இத்தகைய இறக்குமதிகளின் கையாளலின்போது இந்த அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளைப் பின்பற்றுமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2. ஒதுக்கீட்டினைப் பெற்றுள்ளவர் வழங்குனருடனான தனது ஒப்பந்தத்தின் பிரதியொன்றுடனும் வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கடித மொன்றுடனும் விண்ணப்பமொன்றினை மேற்கொள்ளும்போது வர்த்தக வங்கியொன்று வழங்குனரின் நாட்டிலுள்ள தனது பேராளரினூடாக வழங்குனரின் சார்பில் கைமீட்புச் செய்ய இயலாத நாணயக் கடிதம் ஒன்றினை நிறுவலாம். அத்தகைய நாணயக் கடிதம் ஒவ்வொன்றும் நிறுவும் வங்கியின் அடையாள இலக்கத்தினை உடனடுத்து “1 ஆவது யென் கொடை 1996” எனக் குறிப்பிட்ட முன்தொடர் இலக்கம் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியானது, வரையறுக்கப்பட்ட பாங் ஒப் டோக்கியோ, உலகளாவிய வங்கிப் பணிப்பிரிவு டோக்கியோ, யப்பான் என்ற முகவரியிலிருந்து செலவீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொரு நாணயக் கடிதமும் குறித்துரைத்தல் வேண்டும். இலங்கை சனநாயக குடியரசின் எண் 522 - 0021423 கொண்ட சாதாரண யென் வைப்புக் கணக்கில் பற்று வைப்பதன் மூலம் இது மேற்கொள்ளப்படல் வேண்டும். செலவீட்டுக்கான கோரிக்கையானது ஆவணங்கள் நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இசைவாக உள்ளன எனவும், ஆவணங்கள் கடன் திறக்கப்பட்ட வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். <u>அத்தகைய கடன் நிறுவப்பட்டதன் பின்னர் கடன் வழங்கும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்தினதும் இரண்டு பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதன் பின்னர் அவர் கடன் தொடர்பான செலவீட்டு அனுமதியினை வரையறுக்கப்பட்ட பாங் ஒப் டோக்கியோ, டோக்கியோ என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பார். இந்த அனுமதியின்றி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு செலவீடு மேற்கொள்ளப்பட மாட்டாது.</u>

4. கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவுடன் ஆவணங்களின் ரூபாவிற்குச் சமமான தொகையினை சேகரித்துக் கொண்டதன் பின்னர் மட்டுமே கடன் திறக்கும் வங்கி அவற்றினை இறக்குமதியாளருக்கு விடுவித்தல் வேண்டும். இறக்குமதியாளருக்கு

அத்தகைய ஆவணங்களை விடுவிப்பதற்கு முன்னர் ஆவணங்களின் முழுப் பெறுமதியும் மேற்கொள்ளப்படுவதனை வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். **சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட 10 நாட்களுக்குள் இறக்குமதியாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

5. குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்கான 10 நாட்களுக்குள் ஆவணங்களின் பெறுமதியினை இறக்குமதியாளர்கள் செலுத்தத் தவறினால் வங்கியிலிருந்து ஆவணங்கள் பெறப்பட்டதற்கான அறிவுறுத்தல் பெறப்பட்ட நாளிலிருந்து இறக்குமதியாளரினால் உண்டியல் கழிவு செய்யப்படும் நாள் வரை வங்கி வீதத்திற்கு மேலதிகமாக ஆண்டிற்கு 3% வட்டி செலுத்த வேண்டியேற்படும்.

6. இறக்குமதியாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தும் போது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை மேற்கோள்காட்டி வர்த்தக வங்கியானது பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும்.

(அ) இறக்குமதியாளரின் பெயரும் முகவரியும்.

(ஆ) நாணயக் கடிதத்தின் இலக்கம்.

(இ) ஏற்றுமதியாளரின் பெயர்

(ஈ) சமமான யென் தொகை (ஆவணங்கள் வேறு ஏதேனும் மாற்றத்தக்க நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின் குறித்துக் காட்டப்படல் வேண்டும்)

(உ) பிரயோகிக்கப்படும் நாணய மாற்றுவீதம் (யப்பானிய யென் வீதத்தினையும் உள்ளடக்கியது)

(ஊ) ஆவணங்கள் பெறப்பட்ட திகதி

(எ) இறக்குமதியாளருக்கான அறிவுறுத்தல் திகதி.

(ஏ) இறக்குமதியாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி.

7. கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் கப்பலேற்றல் தொடர்பாக பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு பிரதியினையும் இணைப்பதற்கு வர்த்தக வங்கிகள் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

(i) பொருட்களின் விலைப்பட்டியல்

(ii) ஏற்றுமதி முறி / விமான மார்க்கக் கட்டணம்

(iii) வழங்குனருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி, கொடுப்பனவுத் தொகை என்பனவற்றுக்கான சான்று ஆவணங்கள்.

எம். பீ. திசாநாயக்க
முதன்மைக் கணக்காளர்

பிரதிகள் : 1. வெளிநாட்டு மூலவள பணிப்பாளர் நாயகம்
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
செயலகம்
கொழும்பு.
2. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

பிடீ/எப்எப்/ஐடீஏ/92

வங்கித் தொழில் திணைக்களம்
வெளிநாட்டு நிதிப் பிரிவு
1996 ஓகத்து 29.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடீ / 06 / 96

முகாமையாளர்
இலங்கை வங்கி
கூட்டுக்கிளை
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா,

சருவதேச அபிவிருத்தி அமைப்பு 2249 சீஏ – இரண்டாவது
தொலைத்தொடர்பு செயற்றிட்டம்

உலக வங்கியின் சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தலைப்பிடப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கை முறை பின்பற்றப்படலாம்.

1. கொழும்பு 1, லோட்டஸ் வீதி, சிறிலங்கா ரெலிகொம் கட்டடம், சிறிலங்கா ரெலிகொம் பொது முகாமையாளர் (கொள்வனவு) சார்பில் நிறுவப்பட்ட துணை நாடாத கைமீட்புச் செய்ய இயலாத உறுதிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராகவே இறக்குமதிகள் மேற்கொள்ளப்படும்.

2. நாணயக் கடிதத்தினைத் திறப்பதற்கான உங்களது அதிகாரமானது "ஐடீஏ 2249 – சீஏ – இரண்டாவது தொலைத்தொடர்பு செயற்றிட்டம்" என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதமாகும்.

3. என்னால் வேறு வகையில் அறிவுறுத்தப்பட்டாலன்றி உங்களது வங்கியினால் திறக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான செலவீடு சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் மேற்கொள்ளப்படும் என்பதனையும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் சார்பாக சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் சிறப்புக் கடப்பாடு வழங்கப்படுமிடத்து மட்டுமே நாணயக் கடிதம் செயற்படும் என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

4. சருவதேச அபிவிருத்தி அமைப்பின் சிறப்புக் கடப்பாட்டுக்கான விண்ணப்பங்கள் உங்களது வாடிக்கையாளரினால் படிவம் 1931 இல் (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) மேற்கொள்ளப்பட வேண்டியதோடு அதனோடு பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) செலுத்தப்படவுள்ள கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதியொன்று.

(ஆ) உங்களது வங்கியினால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள்.

5. சருவதேச அபிவிருத்தி அமைப்புக்கான ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கி அறிவுறுத்தப்பட வேண்டியதோடு அவை பின்வருவனவற்றின் திருத்தங்களுக்கான எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கக் கூடியதாக இருக்கும்.

(அ) நாணயக் கடிதத்தின் பெறுமதி

(ஆ) விளக்கவுரை அல்லது பொருட்களின் தொகை

(இ) நன்மை பெறுநர்

(ஈ) மூலத் தேதிக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு மேலாக அல்லது சருவதேச அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப்பட்ட தேதிக்கு அப்பால் நாணயக் கடிதம் காலாவதியாகும் தேதியில் ஏதேனும் நீடிப்பு.

ஏனைய திருத்தங்களுக்கு சருவதேச அபிவிருத்தி அமைப்பின் முன் ஒப்புதல் தேவைப்பட மாட்டாது.

6. தலைப்பிடப்பட்ட கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையினால் வழங்கப்படவுள்ளமையினால் ஏனைய நாணயமொன்றினால் குறிப்பிடப்பட்டுள்ள நாணயக் கடிதங்கள் தொடர்பாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான அதனது சிறப்புக் கடப்பாட்டுக் கடிதத்தில் சருவதேச அபிவிருத்தி அமைப்பு சிறப்பு எடுப்பனவு உரிமைக் கடப்பாட்டினைக் குறித்துரைக்கும். அதனது கடப்பாட்டின் இந்த மட்டுப்படுத்தலின் காரணமாக நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு சருவதேச அபிவிருத்தி அமைப்பு வெளிநாட்டில் உள்ள உங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் மொத்தத் தொகையினை செலவீடு செய்யாவிடில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பாக உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய மிகுதியை நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

7. இக்கடனின் கீழ் இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்தின் இணைக்கிணை நிதியக் கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ள கப்பலேற்று ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினைச் செலுத்த வேண்டியதில்லை. எனவே அத்தகைய ஆவணங்கள் பெறப்பட்ட உடனேயே உங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய தரகுகள், கட்டணங்கள், ஏதேனும் இருப்பின் அவற்றை அறவிட்ட பின்னர் அத்தகைய ஆவணங்களை உங்களது வாடிக்கையாளருக்கு நீங்கள் விடுவிக்கலாம்.

8. ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றுடன் நாணயக் கடிதங்களின் பிரதிகள் கொழும்பு இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9. இது தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகள் உங்களுக்கு தனியாக அறிவுறுத்தப்படும்.

உங்களின் உண்மையுள்ள

ஏ. சண்முகசாமி
மேலதிக முதன்மைக் கணக்காளர்
முதன்மைக் கணக்காளருக்காக.

பிரதிகள் : 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

2. பொது முகாமையாளர் (கொள்வனவு)
சிறிலங்கா ரெலிகொம்
சிறிலங்கா ரெலிகொம் தலைமையலுவலக்ம்
லோட்டஸ் வீதி
கொழும்பு 1.

பிஃடீ/எப்ஃஎப்/ஐஎன்டீ/661

வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1.
1996 ஒத்தோபர் 14.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடீ / 07 / 96

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## இந்தியா இலங்கை கொடுகடன் ஒப்பந்தம்
## ஐ.அ. டொலர் 15 மில்லியன் - இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கைமுறை

இலங்கையுடன் செய்து கொண்ட கொடுகடன் ஒப்பந்தமொன்றின் நியதிகளுக்கிணங்க இரண்டு அரசாங்கங்களினாலும் ஒப்புதல் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் நியதிகளின்படி மேலே குறிப்பிடப்பட்ட கொடுகடனின் கீழ் ஐ. அ. டொலர் 15 மில்லியன் வரையில் மட்டுப்படுத்தப்பட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் மூலதனப் பொருட்கள் மற்றும் நீடித்த நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் க. ஏ. பெ. பெறுமதியின் 90% இனையும் ஆலோசனைப் பணிகளின் வழங்கலையும் நிதியிடுவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது. இத்தகைய இறக்குமதிகளை உட்படுத்துவதற்கு வெளிநாட்டு மூலவள பணிப்பாளர் நாயகம் ஒதுக்கீடுகளை வழங்குவார். இந்தக் கொடுகடன் ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதிகளைக் கையாளும்போது பின்வரும் கொடுப்பனவு நடவடிக்கை முறையினைப் பின்பற்றுமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2. அத்தகைய ஒதுக்கீட்டினை அல்லது குறித்துரைக்கப்பட்ட இறக்குமதி உரிமத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளவர் தனது வழங்குனர் உடனான ஒப்பந்தத்தின் பிரதிகளுடன் விண்ணப்பமொன்றினை மேற்கொள்ளும்போது வர்த்தக வங்கியொன்று

(அ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய இணக்கத்தின் கீழ் இந்தியாவில் உள்ள தனது வழங்குனருக்கு ஒப்பந்தத்தின் க. ஏ. பெ. பெறுமதியின் 10% இனை ஐ. அ. டொலர்களில் அனுப்பி வைக்கலாம்.

(ஆ) ஒப்பந்தத்தின் க. ஏ.பெ. பெறுமதியின் 90% இற்காக வழங்குநரின் சார்பில் ஐ. அ. டொலரில் நாணயக்கடிதம் ஒன்றினைத் தொடங்குதல் வேண்டும். இந்த நாணயக் கடிதமானது புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங்க ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளையின் ஊடாக வழங்குநருக்கு நேரடியாகவோ அல்லது இந்தியாவில் உள்ள இன்னுமொரு வங்கியினூடாகவோ அறிவுறுத்தப்படவேண்டியதோடு அது ஒப்பந்தத்தின் பிரதியொன்றினையும் கொண்டிருத்தல் வேண்டும். நாணயக் கடிதம் இன்னொரு வங்கியின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாயின் நாணயக்கடிதத்தினதும் ஒப்பந்தத்தினதும் பிரதிகள் புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளைக்கு கிடைக்கப் பெறச் செய்ய வேண்டும். ஒப்பந்தத்திற்காக ஒப்புதல் வழங்கப்பட்டமையை அறிவிக்கும்போது இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடிதத்தின் தொடர் எண் மற்றும் திகதி என்பவற்றை நாணயக் கடிதம் குறிப்பிட

வேண்டியதோடு தேவையான இடங்களில், இந்திய அரசாங்கத்தினால் அத்தகைய திருத்தங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் தொடர்பான இதேபோன்ற தகவல்களையும் நாணயக் கடிதத்தில் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

3. இந்த அறிவுறுத்தலின் நியதிகளுக்கு இணங்க வழங்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும் பின்வரும் உறுப்புரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) இந்தியக் குடியரசின் அரசாங்கத்தினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஐ. அ. டொலர் 15 மில்லியன் (ஐ. அ. டொலர் பதினைந்து மில்லியன்) கடனிலிருந்து புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளையினால் ஒப்பந்தத்தின் க.ஏ. பெ. பெறுமதியின் 90% இற்கான செலவீடு வழங்கப்படும். புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளையினால் நாணயக்கடிதம் தொழிற்படும் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னர் நாணயக்கடிதம் கைமாற்றத்தக்கதாகும். க. ஏ. பெ. பெறுமதியில் 90% வரையிலான வரையறையினை சரிபார்த்த பின்னர் மட்டுமே புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளையினால் நாணயக்கடிதம் தொழிற்படுத்தக் கூடியதாக ஆக்கப்படுவதுடன் கொடுகடனின் எஞ்சிய 10% வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்து கொள்ளுவது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் பொறுப்பாகும். க. ஏ. பெ. பெறுமதியின் 90% இன் கொடுப்பனவிற்காக புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த வங்கிக்கான அனைத்து உரிமைகோரல்களும் நேரடியாகச் செலுத்தப்படவுள்ள 10% பெறப்பட்டுள்ளமைக்கும் நாணயக் கடிதத்தின் அனைத்து நியதிகளுக்கும் இசைவு காணப்படுகின்றமைக்குமாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

4. இந்த அறிவுறுத்தலின் நியதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட ஒவ்வொரு நாணயக்கடிதமும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியானது, ஒப்பந்தத்தின் க. ஏ. பெ. பெறுமதியின் 10% கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியினால் பெறப்பட்டுள்ளது என்பதற்கும் நாணயக்கடிதத்தின் நியதிகளுக்கு இசைவு காணப்படுகின்றது என்பதற்குமான சான்றிதழை புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளைக்கு சமர்ப்பித்து 1996 இன் இந்தியா இலங்கை கொடுகடன் ஒப்பந்தத்தின் நியதிகளின்படி இலங்கையில் கடனைத் திறக்கும் வங்கிக்கு மூல ஆவணங்களை நேரடியாக அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளையிலிருந்து செலவீட்டைக் கோர வேண்டும் எனவும் குறித்துரைத்தல் வேண்டும். செலவீட்டுக்கான உரிமை கோரலுக்கு ஆதரவாக விலைப்பட்டியலின் பிரதிகளையும் ஏற்று முறிகளின் கைமாற்றத்தகாத உண்டியல்களின் பிரதிகளையும் புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளைக்கு அனுப்பி வைக்குமாறும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கி அறிவுறுத்தப்படல் வேண்டும். கைமாற்றப்பட்ட ஆவணங்களின் பெறுமதியுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் அனைத்துக் கட்டணங்களும் புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளையிலிருந்து கோரப்படுவதற்கான ஏற்பாடுகளை நாணயக்கடிதம் கொண்டிருத்தல் வேண்டும். கடன் ஒப்பந்தத்தின் கீழ் தமது செலவுகளை ஈடுசெய்வதற்கான ஏற்பாடுகளை நாணயக் கடிதம் கொண்டிருத்தல் வேண்டும். கடன் ஒப்பந்தத்தின் கீழ் தமது செலவுகளை ஈடுசெய்வதற்கான பகிர்ந்தளிப்புக் கட்டணமாக புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியாவின் கரைகடந்த கிளை, பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையின் 1 சதவீதத்தின் 1/10 இனைத் தானே அறவிட்டுக் கொள்ளும். அனைத்து நாணயக் கடிதங்களும் 30.01.97 இற்கு முன்னர் நிறுவப்பட வேண்டியதுடன் மூலதனப் பொருட்களின் இறக்குமதிகள்

தொடர்பாக 31.01.98 இற்குப் பின்னர் கொடுப்பனவிற்கு செல்லுபடியாகாது. ஆலோசனைப் பணிகள் மற்றும் நீடித்த நுகர்வுப் பொருட்கள் என்பனவற்றின் விடயத்தில் நாணயக் கடிதங்கள் திறக்கப்பட்டு முழுமையான தொகையும் 31.01.97ஆம் நாளில் எடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு வர்த்தக வங்கியும் இந்த அறிவுறுத்தலின் நியதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட ஒவ்வொரு நாணயக்கடிதத்தினதும் பிரதியொன்றினை இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அனுப்பி வைக்க வேண்டியதோடு பின்வருவனவற்றின் இலங்கை ரூபா பெறுமதியினை இலங்கை அரசாங்க இணைக்கிணை நிதியக் கணக்கில் வரவு வைப்பதற்காக மத்திய வங்கிக்கு கொடுப்பனவை மேற்கொள்ளுவதற்கான கடிதமொன்றினையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(i) புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியா, கரைகடந்த கிளையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை, அதாவது விலைப்பட்டியலின் க.ஏ.பெ. பெறுமதியின் 90%.

(ii) இந்தியாவில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியின் வங்கிக் கட்டணங்கள்.

(iii) புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியா கரைகடந்த கிளையின் கட்டணங்கள் அதாவது உரிமை கோரலின் 1% இன் 1/10 மற்றும்.

(iv) ஒன்று முறியின் நாள் தொடக்கம் இறக்குமதியாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் நாள் வரை மேலே (i) மற்றும் (ii) மற்றும் (iii) என்பன வற்றின் மொத்தத்தின் மீதான தற்போதுள்ள வங்கி வீதத்திலான வட்டி (தற்போது ஆண்டொன்றுக்கு 17 சதவீதம்)

6. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழான இறக்குமதிகளின் க. ஏ.பெ. பெறுமதியின் 90% இன் மீது 5% தீர்வை மிகைக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் இறக்குமதிகளுக்கான நிதியங்களைப் பெற்றுக்கொள்ளும் அரசதுறை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளுக்கு இந்தத் தீர்வை மிகைக் கொடுப்பனவு பிரயோகிக்கப்படமாட்டாது. இதன்படி, முன்னைய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல தொகைகளை இறக்குமதியாளரிடமிருந்து சேகரித்து அதன்பின் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கும் பின்வருமாறு அனுப்பி வைக்குமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(அ) மேலே குறிப்பிடப்பட்ட அரசதுறை தவிர்ந்த ஏனைய இறக்குமதியாளர்களின் விடயத்தில் இறக்குமதிகளின் க. ஏ. பெ. பெறுமதியின் 90% இன் 5% இனை தடுத்து வைத்த பின்னர் (சுங்கத்திலிருந்து பொருட்களை அகற்றுதல் தொடர்பான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட நிலுவை இறக்குமதியாளருக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.) மற்றும்

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட அரசதுறை நிறுவனங்கள் விடயத்தில் மேலே பந்தி 5இல் குறிப்பிடப்பட்டவாறு இறக்குமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி, அத்தகைய இலங்கை ரூபாவிற்குச் சமமான தொகை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு அத்தகைய நாளில் உள்ள வர்த்தக வங்கிகளின் உடன் கொள்வனவு வீதத்தில் கணிக்கப்படல் வேண்டும்.

7. மேலே குறிப்பிடப்பட்ட நியதிகளின்படி இலங்கை மத்திய வங்கிக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகளினால் பின்வரும் விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) இறக்குமதியாளரின் பெயர்

(ஆ) வெளிநாட்டு மூலவள பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் இலக்கமும் திகதியும் மற்றும் இறக்குமதி உரிம இலக்கம் ஏதேனும் இருப்பின் அந்த இலக்கமும்.

(இ) நாணயக் கடிதத்தின் இலக்கமும் விலைப்பட்டியல் இலக்கமும்.

(ஈ) புதுடில்லியில் உள்ள ஸ்டேட் பேங் ஒப் இந்தியா கரைகடந்த கிளையினால் வழங்குநருக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு செலுத்தப்பட்ட தொகையும் செலுத்தப்பட்ட திகதியும்.

(உ) இந்தியாவில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியிலிருந்து இலங்கையின் வர்த்தக வங்கியினால் பெறப்பட்ட ஆவணங்களின் மொத்தப் பெறுமதி.

(ஊ) ஏற்ற முறியின் தேதி.

(எ) இறக்குமதியாளரினால் இணைக்கிணை நிதியங்களுக்கு செலுத்தப்பட்ட திகதி.

8. மேலே பந்தி 5 மற்றும் 6 இல் குறிப்பிடப்பட்ட தொகைகள் செலுத்தப்பட வேண்டிய நாட்களில் மத்திய வங்கிக்குச் சேரவுள்ள கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதற்காக சம்பந்தப்பட்ட இறக்குமதியாளர்களுடன் வர்த்தக வங்கிகள் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியதோடு இந்த அறிவுறுத்தலின் நியதிகளின்படி அது நாணயக் கடிதத்தினை வழங்கியிருக்கும் போது இத்தகைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்து கொள்ளுவது ஒவ்வொரு வர்த்தக வங்கிகளினதும் பொறுப்பாகும். இலங்கை மத்திய வங்கிக்குச் சேரவுள்ள கொடுப்பனவுகள் செலுத்தப்படும்வரை எந்த சந்தர்ப்பத்திலும் வர்த்தக வங்கிகள் இறக்குமதியாளர்களுக்கு ஆவணங்களை விடுவித்தலாகாது.

9. காப்புறுதி மற்றும் /அல்லது சரக்கு தொடர்பாக அங்கீகாரம் வழங்கப்பட்ட பணவனுப்பல்கள் மேலே பந்தி 2 இல் (அ) வில் குறிப்பிடப்பட்ட 10% பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்படும்போது மேற்கொள்ளப்படலாம்.

10. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் வங்கிகளுக்கு அறிவிப்பார்.

11. இந்த அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றதை அறிவிக்கவும்.

உங்களின் உண்மையுள்ள

எம். பி. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

பிரதி : செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

வங்கித் தொழில் திணைக்களம்
1996 நவெம்பர் 18

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீ டீ / 08 / 96

முகாமையாளர்
மக்கள் வங்கி
சருவதேசக் கிளை
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா,

**இறக்குமதிகளுக்கான நடவடிக்கை முறை ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1414 சிறி (எஸ்எப்) இரண்டாவது வலு**
**<u>அமைப்பு முறை நீடிப்பு செயற்றிட்டம்</u>**

கிராமிய மின்மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காகவும் இரண்டாவது வலு அமைப்புமுறை நீடிப்பு செயற்றிட்டத்திற்கான மின்கடத்தல் மற்றும் விநியோக முறையினை அபிவிருத்தி செய்வதற்காகவும் சிஎஉ 53,528,000.00 இற்குச் சமமான தொகையொன்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (இதன் பின்னர் ஆஅவ எனக் குறிப்பிடப்படும்) இணங்கியுள்ளது. இந்தச் செயற்றிட்டம் இலங்கை மின் சபையாலும் (இதன் பின்னர் இ. மி. ச. எனக் குறிப்பிடப்படும்) வரையறுக்கப்பட்ட இலங்கை மின் கம்பனி (தனியார்) நிறுவனத்தினாலும் (இதன் பின்னர் இ. மி. க. த. எனக் குறிப்பிடப்படும்) செயற்படுத்தப்படும். செயற்படுத்தப்படும் முகவராண்மைகள் கொடுகடனின் பகுதியொன்றினை செயற்றிட்டத்திற்கான உபகரணங்களின் இறக்குமதிகளுக்காகப் பயன்படுத்தும் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் இறக்குமதிகளைக் கையாளும்போது பின்வரும் நடவடிக்கை முறையினைப் பின்பற்றுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2. தகைமை பெற்ற மூல நாடுகளில் இருந்தான அனைத்து இறக்குமதிகளும் இலங்கை மின்சபையினதும் வரையறுக்கப்பட்ட இலங்கை மின் கம்பியினதும் விண்ணபத்தின் மீது உங்களால் நிறுவப்பட்ட துணைநாடாத கைமீட்புச் செய்ய இயலாத உறுதிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒவ்வொரு நாணயக்கடிதமும் பின்வரும் உறுப்புரையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> " இந்த நாணயக் கடிதம் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 1414 சிறி (எஸ்எப்) இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அறிவிக்கும் / உறுதிப்படுத்தும் வங்கிக்கு கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்படும்போது மட்டுமே பயனுறுவதாக அமையும். கொடுப்பனவுக்காக கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்"

நாணயக் கடிதத்தின் மேலே குறிப்பிடப்பட்ட உறுப்புரை உள்ளடக்கப்பட்டிராவிட்டாலும் கூட கொடுக்கல் வாங்கலுக்கு நிதியிடுவதற்கான உங்களது கடப்பாட்டின் உறுதியின் மீது இது உடனடியாக செயற்படக் கூடியதாக இருக்கும். எனினும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாடு

வழங்கப்படும் போது நிதியிடல் கடப்பாடு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நகர்த்தப்படும். இந்த விடயத்தில் நாணயக்கடிதம் பின்வரும் உறுப்புரையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> " இந்த நாணயக் கடிதத்திற்கான நிதியிடல் இலங்கை, கொழும்பு 1, மக்கள் வங்கியின் சருவதேச கிளையினால் மேற்கொள்ளப்படும். எனினும், இது ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1414 சிறி (எஸ்எப்) இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் அறிவுறுத்தும் / உறுதிப்படுத்தும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும் போது பின்னையது கடப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டியதுடன் கொடுப்பனவினை /செலவீட்டை ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கோர வேண்டும். உங்களது நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள் சம்பந்தப்பட்ட நிறைவேற்று முகவராண்மைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு நிறைவேற்று முகவராண்மையானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் நிறைவேற்று முகவராண்மையின் வேண்டுகோளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்குமாயின் இந்தக் கடிதத்தின் இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ளவாறான படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வர்த்தக வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது முறைசார்ந்த கடிதமொன்றினை வழங்கும்."

3. (I) நாணயக் கடிதத்தில் பின்வருவனவற்றை உட்படுத்தும் திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் எழுத்து மூலமான ஒப்புதல் தேவைப்படும்.

(அ) நாணயம் மற்றும் நாணயக் கடிதத்தின் தொகை என்பனவற்றை உள்ளடக்கிய கொடுப்பனவு நியதிகள்.

(ஆ) விளக்கக் குறிப்பு அல்லது பொருட்களின் தொகை

(இ) நன்மை பெறுநர்.

(ஈ) மூல நாடு மற்றும்,

(உ) இறுதி நாளுக்கு அப்பால் அதாவது கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான இறுதி நாளாகிய 2000.12.31ஆம் நாளுக்கு அப்பால் நாணயக் கடிதத்தில் காலாவதித் திகதியின் நீடிப்பு.

மேலே (அ) விலிருந்து (உ) வரையிலானவற்றில் உள்ளடக்கப்படாத திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் தேவைப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களின் ஒப்புதலுக்கான கோரிக்கைகள், இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் நிறைவேற்று முகவராண்மையினால் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உங்களினால் கைச்சாத்திடப் பட்ட திருத்தத்தின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் நாணயக்கடிதத்திற்கான திருத்தமானது பின்வரும் ஏற்பாட்டினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

> " இந்தத் திருத்தமானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதல் வழங்கப்படும் போது பயனுறுவதாக அமையும்".

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கப்பட்டால் இக்கடிதத்தின் இணைப்பு 3 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் உங்களது பேராளருக்கும் நிறைவேற்று முகவராண்மைக்கும் தெரியப்படுத்தப்படும்.

(II) ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதல் இன்றி கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான கடைசித் திகதி வரை காலாவதியாகும் தினமும் கப்பலேற்றும் தினமும் நீடிக்கப்படலாம். அத்தகைய நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து உங்களினால் பொருத்தமான முறையில் கைச்சாத்திடப்பட்ட நீடிப்பின் பிரதியொன்று இணைக்கப்பட்டதும் இக்கடிதத்தின் இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளதுமான படிவத்தில் நிறைவேற்று முகவராண்மை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டாலும் உட்படுத்தப்படாவிட்டாலும் ஒவ்வொரு திருத்தத்தினதும் இரண்டு பிரதிகள் சம்பந்தப்பட்ட நிறைவேற்று முகவராண்மைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு தேவையானவிடத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலின் வழங்கலுக்காக நிறைவேற்று முகவராண்மை ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ள நாணயக்கடிதத்தின் நியதிகளின்படி நன்மைபெறுநருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது உங்களது பேராளர், சம்பந்தப்பட்ட ஆவணங்களை உங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியதோடு இக்கடிதத்தின் இணைப்பு 4இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செலவீட்டைக் கோர வேண்டும். செலவீட்டுக்கான கோரிக்கையின் பிரதியொன்றினையும் நிறைவேற்று முகவராண்மைக்கு உங்களது பேராளர் அனுப்பி வைத்தல் வேண்டும். உடனடியான பகிர்ந்தளிப்புக்கு வசதி செய்து கொடுப்பதற்காக இந்தக் கடிதத்தின் இணைப்பு 5 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உங்களது பேராளர் உறுதிப்படுத்தப்பட்ட சுவீப்ட், ரெலெக்ஸ் அல்லது கேபிள் கோரிக்கையொன்றினை அனுப்பி வைக்கலாம். உங்களது பேராளருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி செலவீட்டினை மேற்கொண்டுள்ளதா என்பதை அதிகூடிய விரைவில் உங்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டியதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு செலவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நீங்கள் திருப்திப்படும்வரை உங்களது பேராளரிடமிருந்து பெறப்பட்ட கப்பலேற்றும் ஆவணங்களை நீங்கள் வைத்திருத்தல் வேண்டும். ஆவணங்களை விடுவிக்கும் நேரத்தில் நிறைவேற்று முகவராண்மை யிடமிருந்து எத்தகைய இணைக்கிணை நிதியமும் சேகரிக்கப்படலாகாது.

5. கப்பலேற்றும் ஆவணங்களுக்கும் நாணயக் கடிதங்களின் நியதிகளுக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் கொடுப்பனவுக்கான கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுவதற்கோ அல்லது (கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்) வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுக் கடிதத்தினை ஏற்றுக்கொள்ளுவதற்கோ ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இயலாது காணப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வர்த்தக வங்கி அத்தகைய வேறுபாடுகளின் மத்தியிலும் கொடுப்பனவினை மேற்கொள்ளுவதற்காக உங்களின் மூலமாக நிறைவேற்று முகவராண்மையின் அங்கீகாரத்தினைக் கோர வேண்டும்.

உங்களுடன் கலந்தாலோசித்து நிறைவேற்று முகவராண்மை கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தினை வழங்கிய பின்னர் அத்தகைய வேறுபாடுகள் சம்பந்தமாகவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் நிறைவேற்று முகவராண்மை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கேபிள் மூலம் அறிவித்தல் வேண்டும்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயமொன்றினால் கடப்பாடு வழங்கப்பட்டிருக்கும் வேளையில் அத்தகைய கடப்பாட்டின் கீழ் கொடுப்பனவுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயம் கிடைக்கத்தக்கதாக இருக்குமென ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்பார்க்கும் செலாவணி வீதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான தொகையினை கடப்பாட்டுக் கடிதம் குறித்துரைக்கும். உங்களது பேராளர்களில் எவரேனும் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயத்தில் கோரிய ஏதேனும் குறிப்பான

உரிமை கோரல் விடயத்தில் ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகை ஆகிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாட்டின் கீழ் கிடைக்கத்தக்கதாக உள்ள தொகையினை விஞ்சுமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியானது கிடைக்கத்தக்கதாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலரின் அளவுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லா நாணயங்களின் செலவீட்டை மட்டுப்படுத்தும். இதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் உங்களது நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட உரிமை கோரல் சம்பந்தமாக உங்களது பேராளருக்கான முழுமையான செலவீட்டை அல்லது பகுதியொன்றினைச் செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மறுப்புத் தெரிவிக்குமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அனுமதிக்கப்படாத தொகையினை உங்களது பேராளருக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம். இந்த நோக்கத்திற்காக நிறைவேற்று முகவராண்மையுடன் நீங்கள் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.

7. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் உங்களுக்கு அறிவிப்பார்.

8. உங்களது அனைத்துக் கட்டணங்களும் நிறைவேற்று முகவராண்மையின் கணக்கிற்காக இருத்தல் வேண்டும்.

உங்களின் உண்மையுள்ள

எம். பி. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

பிரதிகள் :

1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2. பொது முகாமையாளர்
இலங்கை மின்சபை
சர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
அ. பெ. 540
கொழும்பு 2.

3. வரையறுக்கப்பட்ட இலங்கை மின் கம்பனி (தனியார்)
இலக்கம் 411 ஈ. எச். குரே கட்டடம் 3ஆம் மாடி
காலி வீதி
கொழும்பு 3.

# வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் - 1996

(இலங்கை ரூபாய்களில்)

| நடைமுறையான நாள் | சுற்றறிக்கை எண் | அவுஸ்திரேலியா டொலர் (டொலர் 1 இற்கு) | ஒஸ்திரிய சிலிங் (சிலிங் 10 இற்கு) | பாரெயின் தினார் (தினார் 1 இற்கு) | பெல்சியம் பிராங்கு (பிராங் 10 இற்கு) | கனடிய டொலர் (டொலர் 1 இற்கு) | தென்சு குறோனர் (குறோனர் 20 இற்கு) | டியுச் மார்க் (டியுச் மார்க் 1 இற்கு) | பின்லாந்து மார்க்கா (மார்க்கா 10 இற்கு) | பிரெஞ்சு பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | கொங்கொங் டொலர் (டொலர் 10 இற்கு) | இத்தாலிய லீறா (லீறா 1000 இற்கு) | யப்பானிய யென் (யென் 100 இற்கு) | குவைத் தினார் (தினார் 1 இற்கு) | மலேசியா ரிங்கித் (ரிங்கித் 1 இற்கு) | நெதர்லாந்து கில்டர் (கில்டர் 1 இற்கு) | நோர்வே குறோனர் (குறோனர் 10 இற்கு) | ஓமானிய ரியால் (ரியால் 1 இற்கு) | சவூதி அரேபிய ரியால் (ரியால் 1 இற்கு) | சிங்கப்பூர் டொலர் (டொலர் 1 இற்கு) | சுவீடன் குறோனர் (குறோனர் 10 இற்கு) | சுவிட்சர்லாந்து பிராங்கு (பிராங்கு 1 இற்கு) | ஐக்கிய அராபிய எமிரேற்ஸ் திராம்கள் (திராம் 1 இற்கு) | ஐக்கிய இராச்சிய பவுண் (பவுண் 1 இற்கு) | ஐக்கிய அமெரிக்க டொலர் (டொலர் 1 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.96 | 4158 | 38.90 | 51.80 | 138.55 | 17.70 | 38.30 | 93.80 | 36.45 | 116.60 | 106.45 | 67.55 | 32.95 | 50.50 | 169.70 | 20.55 | 32.45 | 82.10 | 132.05 | 13.95 | 36.95 | 78.15 | 45.25 | 14.20 | 81.00 | 52.70 |
| 09.01.96 | 4160 | 39.00 | 51.45 | 138.60 | 17.60 | 38.50 | 93.60 | 36.20 | 116.60 | 105.70 | 67.55 | 33.05 | 49.50 | 169.80 | 20.45 | 32.35 | 82.05 | 132.10 | 13.95 | 36.70 | 78.65 | 44.90 | 14.25 | 80.90 | 52.75 |
| 17.01.96 | 4162 | 38.85 | 51.45 | 138.75 | 17.50 | 38.40 | 93.05 | 35.90 | 116.40 | 105.10 | 67.65 | 33.25 | 49.50 | 169.95 | 20.40 | 32.10 | 82.05 | 132.25 | 13.95 | 36.70 | 79.20 | 44.70 | 14.25 | 80.70 | 52.80 |
| 23.01.96 | 4164 | 38.50 | 50.40 | 138.95 | 17.20 | 38.35 | 91.50 | 35.30 | 113.60 | 103.45 | 67.75 | 33.05 | 49.50 | 170.20 | 20.50 | 31.55 | 80.85 | 132.40 | 13.95 | 36.80 | 77.75 | 43.80 | 14.25 | 78.85 | 52.85 |
| 30.01.96 | 4166 | 39.00 | 50.10 | 138.95 | 17.10 | 37.90 | 90.85 | 35.15 | 111.25 | 102.10 | 67.75 | 32.65 | 49.00 | 169.85 | 20.50 | 31.35 | 80.25 | 132.40 | 13.95 | 36.95 | 75.35 | 43.30 | 14.25 | 78.75 | 52.85 |
| 13.02.96 | 4168 | 38.65 | 50.55 | 138.90 | 17.25 | 38.20 | 91.60 | 35.45 | 110.45 | 103.15 | 67.70 | 33.45 | 48.95 | 170.20 | 20.55 | 31.65 | 81.20 | 132.35 | 13.95 | 36.95 | 75.10 | 43.35 | 14.25 | 79.95 | 52.85 |
| 20.02.96 | 4170 | 39.50 | 50.80 | 138.80 | 17.35 | 37.90 | 92.15 | 36.05 | 111.10 | 104.60 | 67.65 | 33.05 | 49.80 | 170.10 | 20.45 | 31.85 | 81.65 | 132.25 | 13.95 | 37.35 | 75.35 | 44.40 | 14.25 | 80.90 | 52.80 |
| 27.02.96 | 4172 | 39.65 | 51.10 | 138.80 | 17.55 | 38.00 | 93.45 | 36.10 | 112.40 | 105.15 | 67.65 | 33.55 | 49.90 | 170.60 | 20.50 | 32.55 | 82.70 | 132.25 | 13.95 | 37.10 | 77.95 | 44.50 | 14.25 | 80.50 | 52.80 |
| 06.03.96 | 4174 | 39.70 | 50.55 | 138.75 | 17.20 | 38.20 | 91.70 | 35.35 | 111.80 | 103.20 | 67.65 | 33.75 | 49.60 | 170.20 | 20.55 | 31.60 | 81.35 | 132.20 | 13.95 | 37.00 | 76.85 | 43.45 | 14.25 | 79.85 | 52.80 |
| 12.03.96 | 4176 | 40.15 | 50.30 | 138.75 | 17.20 | 38.25 | 91.05 | 35.15 | 110.65 | 102.70 | 67.65 | 33.50 | 48.35 | 170.20 | 20.55 | 31.60 | 80.90 | 132.25 | 13.95 | 37.10 | 76.40 | 43.45 | 14.25 | 79.65 | 52.80 |
| 19.03.96 | 4180 | 40.50 | 50.75 | 138.85 | 17.30 | 38.40 | 91.95 | 35.55 | 110.25 | 103.75 | 67.70 | 33.40 | 49.40 | 170.40 | 20.60 | 31.75 | 81.65 | 132.30 | 13.95 | 37.20 | 77.55 | 44.10 | 14.25 | 79.95 | 52.80 |
| 26.03.96 | 4182 | 40.55 | 50.25 | 138.75 | 17.25 | 38.40 | 91.85 | 35.45 | 110.55 | 103.45 | 67.65 | 33.45 | 49.10 | 170.30 | 20.55 | 31.70 | 81.55 | 132.20 | 13.95 | 37.10 | 78.95 | 43.85 | 14.25 | 80.25 | 52.80 |
| 02.04.96 | 4184 | 41.00 | 50.40 | 138.80 | 17.20 | 38.55 | 91.55 | 35.35 | 109.90 | 103.75 | 67.65 | 33.35 | 48.70 | 170.40 | 20.65 | 31.60 | 81.40 | 132.30 | 13.95 | 37.15 | 78.25 | 43.85 | 14.20 | 79.80 | 52.80 |
| 09.04.96 | 4186 | 41.00 | 50.25 | 138.80 | 17.15 | 38.55 | 91.40 | 35.30 | 109.90 | 103.55 | 67.65 | 33.45 | 48.65 | 170.00 | 20.65 | 31.55 | 81.50 | 132.25 | 13.95 | 37.20 | 78.65 | 42.55 | 14.25 | 79.95 | 52.80 |
| 16.04.96 | 4188 | 41.50 | 49.60 | 138.95 | 16.90 | 38.60 | 89.90 | 34.65 | 108.60 | 102.25 | 67.70 | 33.35 | 48.15 | 169.75 | 20.85 | 31.05 | 80.45 | 132.40 | 13.95 | 37.05 | 77.70 | 42.60 | 14.25 | 78.95 | 52.85 |
| 23.04.96 | 4191 | 41.10 | 49.65 | 138.95 | 16.80 | 38.50 | 89.50 | 34.50 | 107.85 | 101.95 | 67.70 | 33.40 | 48.85 | 169.75 | 21.05 | 30.85 | 80.10 | 132.40 | 13.95 | 37.15 | 77.90 | 42.25 | 14.25 | 79.20 | 52.85 |
| 07.05.96 | 4193 | 41.80 | 48.55 | 139.05 | 16.65 | 38.40 | 88.90 | 34.40 | 106.05 | 101.75 | 67.75 | 33.50 | 49.90 | 169.85 | 21.00 | 30.85 | 79.75 | 132.50 | 14.00 | 37.35 | 76.25 | 42.05 | 14.30 | 78.95 | 52.90 |
| 14.05.96 | 4195 | 42.05 | 49.10 | 139.15 | 16.70 | 38.20 | 88.90 | 34.35 | 108.50 | 101.35 | 67.80 | 33.65 | 49.80 | 170.00 | 21.05 | 30.70 | 79.85 | 132.60 | 14.00 | 37.35 | 77.25 | 41.60 | 14.30 | 79.80 | 52.95 |
| 21.05.96 | 4196 | 42.05 | 48.75 | 139.55 | 16.65 | 38.40 | 88.85 | 34.25 | 108.70 | 101.20 | 68.00 | 33.95 | 49.15 | 170.45 | 21.15 | 30.65 | 79.90 | 132.95 | 14.05 | 37.35 | 77.95 | 41.60 | 14.35 | 79.50 | 53.10 |
| 28.05.96 | 4198 | 41.65 | 48.50 | 139.75 | 16.60 | 38.35 | 88.60 | 34.15 | 107.95 | 100.90 | 68.10 | 33.75 | 48.95 | 170.75 | 21.55 | 30.50 | 79.90 | 133.20 | 14.05 | 37.35 | 77.10 | 42.25 | 14.40 | 79.65 | 53.20 |
| 04.06.96 | 4200 | 42.35 | 48.90 | 140.10 | 16.75 | 38.55 | 89.80 | 34.65 | 108.40 | 102.35 | 68.25 | 34.15 | 48.80 | 171.15 | 21.15 | 30.80 | 81.10 | 133.50 | 14.10 | 37.50 | 78.60 | 41.75 | 14.45 | 81.95 | 53.30 |
| 11.06.96 | 4202 | 41.95 | 49.20 | 140.55 | 16.75 | 38.85 | 89.30 | 34.45 | 109.70 | 101.80 | 68.45 | 34.20 | 48.45 | 171.85 | 21.20 | 30.80 | 82.10 | 133.95 | 14.15 | 37.60 | 78.40 | 42.35 | 14.45 | 81.45 | 53.50 |
| 18.06.96 | 4204 | 42.05 | 49.65 | 140.95 | 16.95 | 38.90 | 90.40 | 34.90 | 110.50 | 103.05 | 68.60 | 34.35 | 48.75 | 172.15 | 21.30 | 31.15 | 80.65 | 134.30 | 14.15 | 37.70 | 79.45 | 42.20 | 14.50 | 81.65 | 53.60 |
| 25.06.96 | 4206 | 42.00 | 49.85 | 141.30 | 17.50 | 39.05 | 90.40 | 34.85 | 111.75 | 102.70 | 68.85 | 34.55 | 49.00 | 172.65 | 21.35 | 31.40 | 81.30 | 134.65 | 14.20 | 37.80 | 80.00 | 42.60 | 14.55 | 82.00 | 53.75 |
| 02.07.96 | 4208 | 42.05 | 49.90 | 141.70 | 16.90 | 39.15 | 91.00 | 35.05 | 111.90 | 103.65 | 69.00 | 34.85 | 48.65 | 173.25 | 21.45 | 31.45 | 81.40 | 135.00 | 14.25 | 37.85 | 80.40 | 42.40 | 14.60 | 82.95 | 53.90 |
| 09.07.96 | 4210 | 42.60 | 50.25 | 142.20 | 17.05 | 39.15 | 91.10 | 35.05 | 111.95 | 103.65 | 69.25 | 35.00 | 48.20 | 173.90 | 21.50 | 31.25 | 82.15 | 135.50 | 14.30 | 37.90 | 80.45 | 42.65 | 14.60 | 83.30 | 54.10 |
| 16.07.96 | 4212 | 42.75 | 51.15 | 142.40 | 17.05 | 39.20 | 91.50 | 35.25 | 112.35 | 104.15 | 69.35 | 35.00 | 48.50 | 174.15 | 21.55 | 31.40 | 82.35 | 135.70 | 14.30 | 37.85 | 80.05 | 44.10 | 14.60 | 83.20 | 54.20 |
| 23.07.96 | 4214 | 42.50 | 51.65 | 142.45 | 17.10 | 39.30 | 93.25 | 36.00 | 115.40 | 106.35 | 69.40 | 35.35 | 49.85 | 174.25 | 21.55 | 32.10 | 82.50 | 135.75 | 14.30 | 37.80 | 80.85 | 44.55 | 14.65 | 83.00 | 54.20 |
| 31.07.96 | 4216 | 42.30 | 51.60 | 142.50 | 17.45 | 39.05 | 94.20 | 36.35 | 115.60 | 107.20 | 69.45 | 35.40 | 49.65 | 174.65 | 21.55 | 32.35 | 83.55 | 135.80 | 14.30 | 37.95 | 82.10 | 44.85 | 14.65 | 83.65 | 54.20 |
| 06.08.96 | 4218 | 41.55 | 51.45 | 142.55 | 17.65 | 39.10 | 94.20 | 36.40 | 116.50 | 107.15 | 69.45 | 35.45 | 50.25 | 174.95 | 21.55 | 32.45 | 84.40 | 135.85 | 14.35 | 37.95 | 81.60 | 44.80 | 14.65 | 82.95 | 54.25 |
| 13.08.96 | 4220 | 41.85 | 51.85 | 142.85 | 17.70 | 39.30 | 94.30 | 36.50 | 117.35 | 106.65 | 69.60 | 35.50 | 49.85 | 175.30 | 21.60 | 32.50 | 84.30 | 136.10 | 14.35 | 38.05 | 81.10 | 44.70 | 14.70 | 83.55 | 54.35 |
| 20.08.96 | 4222 | 42.30 | 51.80 | 143.20 | 17.55 | 39.30 | 93.50 | 36.15 | 117.50 | 105.80 | 69.80 | 35.55 | 50.00 | 175.50 | 21.65 | 32.20 | 84.35 | 136.45 | 14.40 | 38.30 | 81.35 | 45.35 | 14.70 | 83.60 | 54.50 |
| 27.08.96 | 4224 | 42.75 | 51.55 | 143.30 | 17.75 | 39.40 | 94.65 | 36.55 | 116.25 | 107.00 | 69.85 | 35.65 | 50.00 | 175.60 | 21.65 | 32.60 | 83.75 | 136.55 | 14.40 | 38.35 | 82.40 | 45.00 | 14.75 | 84.10 | 54.50 |
| 03.09.96 | 4227 | 42.70 | 51.80 | 143.45 | 17.70 | 39.55 | 94.70 | 36.50 | 117.90 | 106.65 | 69.95 | 35.80 | 49.70 | 175.85 | 21.70 | 32.55 | 84.50 | 136.70 | 14.40 | 38.40 | 81.80 | 44.50 | 14.75 | 84.40 | 54.60 |
| 10.09.96 | 4229 | 43.45 | 51.85 | 143.75 | 17.65 | 39.45 | 94.15 | 36.30 | 117.15 | 106.30 | 70.10 | 35.85 | 49.60 | 176.20 | 21.70 | 32.40 | 84.35 | 137.00 | 14.45 | 38.50 | 81.45 | 43.75 | 14.80 | 84.50 | 54.70 |
| 17.09.96 | 4231 | 43.00 | 51.05 | 144.10 | 17.45 | 39.65 | 93.20 | 35.90 | 115.20 | 105.45 | 70.25 | 35.55 | 49.15 | 176.15 | 21.75 | 32.05 | 84.60 | 137.30 | 14.50 | 38.55 | 81.50 | 43.90 | 14.80 | 84.50 | 54.85 |
| 24.09.96 | 4233 | 43.05 | 50.95 | 144.30 | 17.40 | 39.80 | 93.30 | 35.85 | 116.70 | 106.00 | 70.35 | 35.70 | 49.50 | 176.45 | 21.75 | 32.10 | 83.80 | 137.50 | 14.50 | 38.60 | 82.25 | 43.45 | 14.85 | 84.60 | 54.90 |
| 01.10.96 | 4235 | 43.15 | 50.85 | 144.50 | 17.40 | 39.95 | 93.00 | 35.75 | 116.00 | 105.65 | 70.45 | 35.85 | 49.05 | 176.65 | 21.70 | 31.90 | 83.95 | 137.70 | 14.50 | 38.65 | 82.20 | 43.40 | 14.85 | 85.15 | 54.95 |
| 08.10.96 | 4237 | 43.05 | 50.65 | 144.75 | 17.30 | 40.30 | 92.95 | 35.65 | 116.10 | 105.25 | 70.45 | 35.85 | 48.75 | 176.95 | 21.80 | 31.75 | 83.80 | 137.90 | 14.55 | 38.65 | 82.50 | 44.70 | 14.85 | 85.40 | 55.05 |
| 15.10.96 | 4239 | 43.15 | 50.75 | 144.80 | 17.30 | 40.35 | 93.00 | 35.70 | 116.10 | 105.40 | 70.60 | 35.85 | 48.90 | 177.10 | 21.80 | 31.80 | 83.75 | 138.00 | 14.55 | 38.70 | 82.50 | 43.55 | 14.90 | 86.20 | 55.10 |
| 22.10.96 | 4241 | 43.50 | 50.40 | 145.05 | 17.20 | 40.50 | 92.70 | 35.45 | 115.30 | 105.00 | 70.70 | 35.60 | 48.50 | 177.40 | 21.80 | 31.60 | 83.85 | 138.20 | 14.60 | 38.65 | 82.35 | 43.00 | 14.90 | 86.95 | 55.20 |
| 29.10.96 | 4243 | 43.30 | 50.95 | 145.05 | 17.40 | 40.65 | 93.60 | 35.90 | 116.25 | 106.25 | 70.70 | 35.95 | 48.10 | 177.45 | 21.80 | 32.00 | 83.80 | 138.20 | 14.60 | 38.60 | 82.90 | 43.30 | 14.85 | 87.85 | 55.20 |
| 05.11.96 | 4245 | 43.05 | 51.00 | 144.90 | 17.55 | 40.95 | 93.90 | 36.05 | 116.70 | 106.70 | 70.65 | 36.00 | 48.25 | 177.30 | 21.60 | 32.15 | 84.85 | 138.05 | 14.55 | 38.80 | 83.05 | 43.05 | 14.85 | 89.30 | 55.10 |
| 12.11.96 | 4247 | 43.00 | 51.00 | 144.80 | 17.55 | 40.95 | 94.45 | 36.30 | 116.50 | 107.35 | 70.60 | 36.00 | 48.95 | 177.50 | 21.70 | 32.40 | 85.65 | 138.00 | 14.55 | 38.95 | 82.85 | 43.20 | 14.85 | 90.00 | 55.10 |
| 19.11.96 | 4249 | 43.20 | 51.45 | 144.80 | 17.55 | 40.70 | 94.35 | 36.20 | 117.15 | 107.10 | 70.60 | 36.00 | 49.10 | 177.45 | 21.65 | 32.25 | 86.50 | 137.95 | 14.55 | 39.00 | 82.45 | 42.70 | 14.85 | 90.85 | 55.10 |
| 26.11.96 | 4158 | 44.35 | 51.65 | 144.75 | 17.50 | 40.70 | 93.95 | 36.05 | 117.30 | 106.35 | 70.55 | 36.35 | 48.85 | 178.00 | 21.65 | 32.10 | 85.60 | 137.95 | 14.55 | 38.95 | 82.10 | 42.70 | 14.85 | 91.60 | 55.05 |
| 03.12.96 | 4251 | 44.70 | 50.65 | 145.00 | 17.25 | 40.45 | 92.75 | 35.55 | 115.55 | 104.70 | 70.70 | 36.10 | 48.00 | 178.35 | 21.65 | 31.65 | 85.15 | 138.20 | 14.55 | 38.95 | 81.35 | 41.85 | 14.90 | 92.10 | 55.15 |
| 10.12.96 | 4253 | 43.65 | 50.65 | 145.10 | 17.15 | 40.25 | 92.20 | 35.35 | 114.15 | 104.60 | 70.75 | 35.90 | 48.40 | 178.45 | 21.70 | 31.50 | 84.50 | 138.25 | 14.60 | 39.05 | 80.25 | 41.50 | 14.90 | 89.95 | 55.20 |
| 17.12.96 | 4255 | 43.35 | 50.45 | 145.20 | 17.05 | 40.15 | 91.90 | 35.20 | 114.80 | 104.35 | 70.75 | 35.90 | 48.10 | 178.55 | 21.65 | 31.40 | 84.20 | 138.25 | 14.60 | 39.10 | 80.00 | 41.35 | 14.90 | 90.75 | 55.25 |
| 26.12.96 | 4257 | 43.55 | 50.00 | 145.20 | 17.10 | 40.00 | 92.25 | 35.25 | 114.75 | 104.40 | 70.75 | 35.85 | 47.90 | 178.60 | 21.65 | 31.45 | 84.85 | 138.40 | 14.60 | 39.10 | 80.10 | 41.05 | 14.90 | 91.40 | 55.25 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி